**சொரனாதொட்டை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 ஜூன் 03 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஜூன் 19 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டெம்பர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தகவல்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன. என்றும், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சொரனாதொட்டை பிரதேச சபையின் நடவடிக்கைகளது, நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன. என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 தேறிய சொத்துக்களில் குறைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 641,459,663 ஆகும். முன்னைய ஆண்டின் முடிவிலான தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 642,251,003 ஆகும். தேறிய குறைவு ரூபா 791,340 ஆகும்.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதிய பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரது 2013 மே 28 ஆந் திகதிய காலக் கழிவுக் கூற்றின் பிரகாரம், திருத்தஞ் செய்யப்பட்ட கடன் தொகை ரூபா 8,834,609 ஆகும். இது ரூபா 8.358,593 ஆக ஐந்தொகையில் காட்டப்பட்டமையால், நிதிசார் கூற்றுக்களில் கடன் மீதியானது ரூபா 476,016 குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்ற கடனுக்காக மீளாய்வாண்டின்போது செலுத்த வேண்டிய ரூபா 763,242 வட்டியானது கணக்கிலிடப்படாமையால் செலவினம் ரூபா 763,242 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 1,056,999 க்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக, நிதிசார் கூற்றுக்களில் பொறுப்புகள் ரூபா 1,056,999 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்தச் சம்பள மீளளிப்பான ரூபா 8,540,442 ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் வெவ்வேறாகப் பகிர்ந்து காட்டப்படாது பொது நிர்வாகத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்குகளது மொத்த மீதி ரூபா 10,661,868 ஆகும். கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது மொத்த மீதி ரூபா 17,567,057 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 643,401,588 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் அதனைத் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்ட 2008 ஜனவரி 25 ஆந் திகதிய 1523/16 இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானி என்பன | 2013 ஆம் ஆண்டிற்கான வர்த்தக அனுமதிப் பத்திரங்களைப் பெற்ற 12 வர்த்தக நிலையங்கள் (இ) பட்டோலையின் பிரகாரமானவை எனக் கணிப்பு ஒன்றின் மூலம் இனங் காணப்படவில்லை. தொடர்புடைய வர்த்தமானி சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டம் | 2013 ஏப்ரல் முதல் டிசெம்பர் வரை ரூபா 25,366 முத்திரைக் கட்டணமானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாதிருந்தது. |
| (இ) | இலங்கை குடியரசின் 371 ஆம் இலக்க நிதிப்பிரமாணம் | 2012, 2013 ஆம் ஆண்டுகளில் 12 சந்தர்ப்பங்களில் சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 39,667 முற்பணமானது நிதிப்பிரமானத்தின்படி தீர்த்து வைக்கப்படவில்லை. |
| (ஈ) | இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவை – அத்தியாயம் XXIV பிரிவுகள் 1.6 மற்றும் 4 என்பன | 2011 ஆம் ஆண்டு தொடக்கம் சபையில் இடமாற்றத்திற்குள்ளான மற்றும் பதவி நீங்கிய பத்து ஊழியர்களிடமிருந்து ரூபா 26,587 கடனானது அறவிடப்படாதிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 11,638 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,180,202 ஆகும். இதற்கமைய, நிதிசார் கூற்றுக்களில் ரூபா 1,191,840 பாதகமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிசார் விளைவுகளின் தேறிய குறைவினது பகுப்பாய்வுடனான மீளாய்வு பின்வருமாறு.

| மீண்டுவரும் வருவாய் | 2013 | 2012 | வேறுபாடு | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தீர்வையும் வரியும் | 3,828,127 | 4,798,831 | (970,704) | |
| வாடகை | 470,400 | 640,092 | (169,692) | |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 484,240 | 531,011 | (46,771) | |
| சேவைக் கட்டணம் | 1,010,143 | 1,360,301 | (350,158) | |
| பிடிஆணைக்கட்டணமும் தண்டப்பணமும் | 378,228 | 337,381 | 40,847 | |
| ஏனைய வருவாய் | 141,818 | 331,342 | (189,524) | |
| வருவாய்க்கான உதவி | 8,540,442 | 6,981,079 | 1,559,363 | |
| | | | | (126,629) |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படியும் | 11,181,564 | 9,784,369 | (1,397,195) | |
| பயணச் செலவினம் | 199,716 | 209,299 | 9,583 | |
| வழங்கலும் உபகரணமும் | 598,205 | 1,059,058 | 460,853 | |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 923,922 | 540,732 | (383,190) | |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 1,518,026 | 1,341,257 | (176,769) | |
| வட்டி, பங்கிலாப, மிகையூதியக் கொடுப்பனவுகள் | 15,000 | 420,349 | 405,349 | |
| உதவிப் பணம், உதவு தொகை, நிவாரணத் தொகை | 306,643 | 420,333 | 113,690 | |
| ஒய்வூதியம், ஓய்வூதிய நலன் பணிக்கொடை | 121,959 | 24,437 | (97,522) | |
| | | | | (1,065,201) |
| | | | பாதகமான வேறுபாடு | (1,191,840) |

### 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்புச் செயலாற்றல்

தீர்வை மற்றும் ஏக்கர் வரி என்பன அறவிடப்படுதலில் உள்ள முன்னேற்றம் நலிவடைந்திருந்தது.

### 2.3.2 குத்தகை வாடகை

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், பிரதான விலை மதிப்பீட்டாளராலோ அல்லது உள்ளூராட்சி விலை மதிப்பீட்டாளராலோ சபைக்குச் சொந்தமான 25 கடைகளது மாதாந்த குத்தகை வாடகை மதிப்பீடு செய்யப்படவில்லை.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளாரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 655,508 |
| முத்திரைக் கட்டணம் | 447,041 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2012 ஆம் ஆண்டு தொடக்கம் 13.5 எம்பயர் நீர் மோட்டார் ஒன்று (தொடர் இலக்கம் (7576F) பழுதுபார்க்கப்பட்டுப் பயன்படுத்தப்படாதிருந்தது.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

சபையின் மீளாய்வாண்டிற்கான வரவு,செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இதன் மூலம் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் காரணியாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

| மீண்டுவரும் வருவாய் | வரவு, செலவு திட்டமிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 900,000 | 484,240 | 415,760 | 46 |
| சேவைக் கட்டணம் | 1,365,000 | 1,010,143 | 354,857 | 26 |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 630,000 | 378,229 | 251,771 | 40 |
| ஏனைய வருவாய் | 480,000 | 141,818 | 338,182 | 70 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படியும் | 9,095,00 | 11,181,564 | 2,086,564 | 23 |
| பயணச் செலவினம் | 450,000 | 199,716 | 250,284 | 56 |
| வழங்கலும் உபகரணமும் | 691,760 | 598,205 | 93,555 | 13 |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 720,000 | 923,922 | 203,922 | 28 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 1,363,000 | 1,518,026 | 155,026 | 11 |
| உதவிப்பணம், உதவு தொகை நிவாரணத் தொகை | 25,000 | 15,000 | 10,000 | 40 |
| வட்டி, பங்கிலாப, மிகையூதியக் கொடுப்னவுகள் | 605,000 | 306,643 | 298,857 | 49 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன், பணிக்கொடை | 25,000 | 121,959 | 96,959 | 388 |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்